THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 4,857 up to 30th June 1960.

(b) 1,677 are given education and 4,605 are given industrial training.

SRI P. G. MANICKAM : மேற்கொண்டு இளம் குற்றவாளிகள் அவர்களுடைய தண்டனை முடிவு பெற்ற பிறகு அந்தந்தத் தொழிலை நடத்துவதற்கு சர்க்கார் உதவி அளிக்கிறார்களா? அப்படியென்றால் அவர்களுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப் பட்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கான புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

(கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ எம். கந்தசாமி படையாச்சியும், ஸ்ரீ வி. எஸ். அருணாசலமும் கனம் சபாநாயகருக்கும், பேசும் அங்கத்தினருக்கும் குறுக்கே சென்றார்கள்.)

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். சபாநாயகருக்கும் பேசும் அங்கத்தினருக்கும் குறுக்கே கனம் அங்கத்தினர்கள் போகக்கூடாது. இப்பொழுது கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ கந்தசாமி படையாச்சி அவர்களும், ஸ்ரீ அருணாசலம் அவர்களும் குறுக்கே போனார்கள். அப்படி யாரும் போகக்கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. B. S. MANI : இளம் குற்றவாளிகள் தங்களுடைய தண்டனை காலம் முடிந்த பிறகும்கூட அவர்கள் எடுத்துக் கொள்ளும் பயிற்சிகள் முடியாதிருந்தால், பயிற்சி காலம் விஸ்தரிக் கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுடைய தண்டனை காலத்திற்குள் கொடுக்கப்படும் பயிற்சி முடியா விட்டால், அதைத் தொடர்ந்து கொடுப்பதற்கு தண்டனை முடிந்த பிறகு கவனிக்கப்படும்.

Khadi

* 456 Q.—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the production and sale of Khadi in the State is on a profitable basis;

(b) if so, the profit and loss account for 1958-59 and 1959-60; and

(c) whether there is any proposal to reduce the price of Khadi cloth?

6th September 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The latest audited accounts available are for 1957–58, according to which the Khadi production and sale is on a profitable basis.

(*b*) The audit of the *pro forma* accounts for 1958–59 and 1959-60 have not yet been completed. It is not therefore possible now to furnish the profit and loss account.

(*c*) No.

SRI S. NAGARAJA MONIGAR : Sir, is it not a fact that the Governmental effort is there for a considerable number of years for increasing the production of Khadi and, if so, is it not fair to hope that there will be a reduction in the price of Khadi?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலையைக் குறைப்பதற்கு அவ்வப்போது நமது சர்க்கார் கவனித்து வருகிறது. அது மட்டுமல்லாமல் ஆல் இந்தியா காதி அண்டு வில்லேஜ் கமிஷன் மத்தியஸ்தர்களும் கவனித்து வருகிறார்கள். விலை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது குறைக்கப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : How is it that auditing is not yet over for two years. May I hope that in the interest of the development of Khadi, efforts will be made to see that auditing, etc., are over earlier?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆடிட்டிங்கில் ஓரளவு தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கூடிய சீக்கிரத்தில் கணக்குகளை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படுவதைப்பற்றி கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

SRI N. R. THIAGARAJAN : அம்பர் சர்க்கா நூலில் தயார் செய்யப்படும் கதர் விலையைக் குறைப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI K. B. S. MANI : முந்திய காலத்தை விட கதர் உற்பத்தி அதிகமாக இருந்தும், விற்பனை அதிகமாக இருந்தும் பல செண்டர்களில் பணத்தைக் கையாடி விடுவதன் காரணமாக சர்க்காருக்கு நஷ்டத்தை உண்டாக்கி இருப்பதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரிரு இடங்களில் ஓரிருவர் பணத்தைக் கையாடி இருக்கலாம். அது எங்கும் இருக்கும் விஷயம். கதர் விஷயத்தில் பிரத்தியேகமாக ஒன்றும் இல்லை.

Kundah Project

* 457 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது குந்தாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவென்ன?